**O.S.No.78/2021 நாள் 1 PW 1 – திருமதி.சுஜா.**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை தொடர்ச்சி.

பிரதிவாதியும், வழக்கறிஞர் கே.பி.குமாரும் நான்கொடுத்த புகாரை திரும்ப பெறுவதற்கு அழுத்தம் கொடுத்ததாக பிரமாண வாக்குமூலம் பாரா 10ல் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த மாதத்தில் அழுத்தம் கொடுத்தார் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் கே.பி.குமாரும், பிரதிவாதியும் கிரைய ரத்து பத்திரத்தை காவல் நிலையத்தில் கொடுத்து எனக்கு தெரியாமல் புகாரை முடித்துவிட்டார்கள் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், வழக்கறிஞர் கே.பி.குமாருக்கும் பேச்சு வார்த்தை இருந்ததா என்றால் இருந்தது. அவர்களுக்குள் எந்த விதமான சண்டையும் கிடையாது என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைப்பத்திரத்தின் படி வருவாய் துறை ஆவணங்களில் பிரதிவாதியின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் தபசில் சொத்தில் இன்றையதினம் வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் மாவட்ட காவல் கண்காணிப்பளரிடம் யார் மீது எல்லாம் புகார் கொடுத்தேன் என்றால் குமார் பாண்டியன், முருகேசன், மேலும் அதில் சாட்சியாக கையொப்பம் போட்ட நபர் மீதும் கொடுத்திருந்தேன். சார்பதிவாளர் மீதும் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். சார்பதிவாளர் என்ன தவறு செய்தார் என்றால் நீதிமன்ற ஜப்திக்கு எதிராக ஆவணம் பதிவு செய்தார். என்னுடைய முதல் கட்ட பிராதில் பிராது தபசில் சொத்தை பொறுத்து ஜப்தி இல்லை என்றும், தற்போது அதற்கு மாறாக பிராது தபசில் சொத்திற்கு ஜப்தி இருந்தது என்றும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிராதில் சொல்லியுள்ள சட்டப்பிரிவுகள் அனைத்தும் பிரதிவாதிக்கு தான் பொருந்தும் என்றால் சரியல்ல.நான் சரியான பிரதிரோயஜனத்திற்கு பிராது தபசில் சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து, அனுபவத்தையும் ஒப்படைத்துவிட்டு தற்போது பெயரளவிலான கிரைய ஆவணம் என்று சாட்சியம் அளிப்பது முரண் தடையாகும் என்றால் தவறு. நான் சுத்தகரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றாலும், எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்ககூடியதல்ல என்றாலும் சரியல்ல. எனது வழக்கு சட்ட ரீதியாக தடை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.